*385 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று கோரி எத்தனை கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன ?

(இ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) தாண்டவராயன் சோழகப்பேட்டை கிராமத்திலிருந்து ஒன்றும், வயலானூர் கிராமத்திலிருந்து ஒன்றும் ஆக இரண்டு முறையீடுகள் வந்தன.

(2). தாண்டவராயன் சோழகப்பேட்டை கிராமத்திற்கு மட்டும் நாணயச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் அது திறம்படச் செயல்படுவது அரிது. எனவே மனுக்கொடுத்தவர்கள் அவர்களுடைய கிராமத்திற்கு அண்மையில் உள்ள கணக்கர்பட்டு பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேருமாறு அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

வயலானூர் கிராமத்திலிருந்து வந்த முறையீட்டைப் பொறுத்தவரையில் வயலானூர் முத்தாலம்மன் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் நாணயச் சங்கமொன்று அக்கிராமத்தில் ஏற்கெனவே இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இச்சங்கம் பல்லாண்டுகளாகச் செயலற்றிருந்ததாலும், அச்சங்கத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லையாதலாலும் அச்சங்கத்தைக் கலைப்பதற்காக அரசாங்கக் கலைப்பு அதிகாரி (Official Liquidator) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வயலானூர் கிராமம் அண்மையிலுள்ள பூவாலை பல நோக்கக்கூட்டுறவுச் சங்கத்தின் செயல் எல்லைக்குள் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க சர்க்காரின் அடிப்படைத் திட்டங்கள் என்ன ? ஹரிஜனங்களுக்குத் தனிச் சலுகை அளிக்க இந்தச் சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுகிறபோது லையபிள் யூனியனாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அங்கத்தினர்கள் அத்தனைபேரும் சேர்ந்திருந்தால்— அது செயல்படப்போதுமா என்று பார்த்து முடிவு செய்யப்படுகிறது. ஹரிஜனங்களுக்கு எந்த முறையில் அமைக்க வேண்டும் என்பதை எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

நவீன அரிசி அரைவை ஆலை, திருவாரூர்

*386 வினா.—திரு. ஏ. அ. சுப்பராஜா : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தய்வுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவாரூர் நவீன அரிசி ஆலை எப்பொழுது துவக்கப்பட்டது ?

(இ) இதுவரையில் எத்தனை டன்கள் அரிசி அரைவை நடத்தியிருக்கிறது ?

(உ) ஒரு டன் அரிசி அரைவை செய்ய இவ்வாலையில் எவ்வளவு செலவு ஆகிறது ?

(எ) தனியார் மில்லில் அரைவை செய்ய ஒரு டன்னுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தொகையென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதியன்று திருவாரூர் நவீன அரிசி ஆலை துவக்கப்பட்டது.

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் முடிவுவரை 16,275 (பதினாறு ஆயிரத்து இருநூற்று எழுபத்தைந்து) டன் நெல் அரைக்கப்பட்டது.